இணைப்பு I

ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

தென் ஆற்காடு மாவட்டத் தலைநகரான கடலூரில் கொசுத் தொல்லையை ஒழிக்க நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிதம்பரத்தி லுள்ள தேசிய யானைக்கால் தடுப்புத் திட்ட கட்டுப்பாட்டு பிரிவின் ஒரு பகுதி கடலூரில் பணியாற்றுகிறது. கொசுக்களை புழுப் பருவத்திலேயே மருந்தடித்து அழித்து கொசுக்கள் பெருகாமல் இருக்க இத்திட்டம் வகை செய்கிறது. இது தவிர, மூன்றில் ஒரு பங்கு அரசு மான்யத்துடன் ஆண்டுக்கு ரூபாய் 19,500 செலவில் கொசுக்கான புழுப் பருவத்திலேயே ஒழிக்கும் திட்ட மொன்றை கடலூர் நகராட்சி செயல்படுத்தி வருகிறது. எனவே தேவையான நடவடிக்கைகளை அரசும் நகராட்சியும் எடுத்துள்ளது என்று கூறிக்கொள் கிறேன். இது தொடர்பாக வரி கொடுப்போர் சங்கத்தின் நேரடி நடவடிக்கை குறித்து அரசுக்கு எந்தவித தகவலுமில்லை என்றும் கூறிக்கொள்கிறேன்.

இணைப்பு II

518 ஆம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

கன்னியாகுமரி மாவட்டத்தில் 64,000 ஏக்கர் நிலங்கள் கோதையாறு நீர்ப் பாசனத்தின் கீழ் வருகிறது. இந்நிலங்கள் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சித்தார் அணை 1 மற்றும் 2 நீர்த்தேக்கங்களால் பாசன வசதி பெறுகிறது. இவ்வாண்டு பருவ மழையை எதிர்பார்த்து, குறிப்பிட்ட நாளான 1—6—1980 அன்று கோதையாறு பாசனத்திற்கு தண்ணீர் விடப்பட்டது. தென்மேற்கு பருவ மழையும் வடகிழக்குப் பருவ மழையும் இந்த ஆண்டு மிகவும் குறைவாக இருந்தன. 1—6—1980 முதல் 31—12—1980 வரை பேச்சிப்பாறை, பெருஞ்சாணி நீர்த்தேக்கங்களில் வந்த நீர்வரத்து, சராசரி நீர்வரத்தில் 58 விழுக்காடுதான் இருந்தது. இந்த நீர்த்தேக்கங்களில் இப்பொழுதுள்ள நீரின் கொள்ளளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

நீர்த்தேக்கம்	முழுக் கொள்ளளவு	இப்பொழுது இருக்கும் கொள்ளளவு
	(மி.க.அ.)	(மி.க.அ.)
பேச்சிப்பாறை	4450	141
பெருஞ்சாணி	2890	39
சித்தார் அணை 1	393	60
சித்தார் அணை 2	609	124

2. பேச்சிப்பாறை நீர்த்தேக்கத்தின் மேலே அமைந்துள்ள மேல் கோதையார் மின்சார தேக்கத்தில் இருக்கும் இப்பொழுதைய நீரின் கொள்ளளவு 64 மி. க. அடி. ஆகையால், இந்த நீர்த்தேக்கத்திலிருந்து போதுமான அளவு நீரை கோதையாறு பாசனத்திற்கு பெற முடியாது.

3. இப்போதிருக்கும் குறைவான நீரின் கொள்ளளவைக் கருத்தில் கொண்டு தல அதிகாரிகள் இருக்கும் நீரை சம அளவில் பகிர்ந்தளித்து எல்லா நிலங்களுக்கும் பாசன வசதி கொடுப்பதற்காக முறைப்பாசனத்தை அமுலாக்கி உள்ளனர்.

4. இப்போதிருக்கும் கஷ்டங்கள் பருவ மழை பொய்த்ததால் ஏற்பட்டது. பொதுப்பணித் துறை இருக்கும் நீரைச் சிக்கனமாகவும் சமமாகவும் நல்ல முறையில் எல்லாப் பகுதிகளுக்கும் பகிர்ந்தளிக்க ஆவன செய்து வருகின்றது.

இணைப்பு III

[519-ம் பக்கத்தில் இனம் 5 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 2 OF 1981.

(As passed by the Assembly.)

A Bill further to amend the Tamil Nadu Entertainments Tax Act, 1939.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-second Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement*.—(1) This Act may be called the Tamil Nadu Entertainments Tax (Amendment) Act, 1981.

(2) (i) Section 2 shall be deemed to have come into force on the 15th October, 1980;

(ii) Clause (i) of section 3 shall be deemed to have come into force on the 16th January, 1981; and

(iii) Clause (ii) of section 3 shall be deemed to have come into force on the 15th October, 1980.